# வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

3-ஆம் பக்கத் தொடர்ச்சி

மதுரா செந்தில்
அதிரடி அல்தாப்

சங்கரன்கோயில் - கவிஞர் தமிழ்தாசன்
ஈ. ராஜா, எம்.எல்.ஏ.,
டாக்டர் கலை கதிரவன்

எழும்பூர் - செந்தலை கவுதமன்
மாண்புமிகு பி.கே. சேகர்பாபு
செங்கை தாமஸ்

உடுமலைபேட்டை - இரா. இராஜீவ்காந்தி
இல. பத்மநாபன்
சேலம் கோவிந்தன்

கம்பம் - காசி முத்து மாணிக்கம்
நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ.,
சிங்கை பிரபாகரன்

கும்மிடிப்பூண்டி - கவிஞர் மனுஷ்யபுத்திரன்
டி.ஜெ.எஸ்.கோவிந்தராஜ், எம்.எல்.ஏ.,
தமிழ்க்கொண்டான்

ஆரணி - கரூர் முரளி
எம்.எஸ். தரணிவேந்தன், எம்.பி.,
பேரணாம்பட்டு
இராஜேந்திர பிரசாத்

துறையூர் - நந்தனம் நம்பிராஜன்
காடுவெட்டி நா. தியாகராஜன், எம்.எல்.ஏ.,
சாவல்பூண்டி மா. சுந்தரேசன்

மேலூர் - முனைவர் பொன்னேரி சிவா
மாண்புமிகு பி. மூர்த்தி
வயலூர் கிருஷ்ணமூர்த்தி

மேட்டூர் - வேலூர் கென்னடி
டி.எம். செல்வகணபதி, எம்.பி.,
நெய்வேலி தங்கம்
லயோலா ராஜசேகர்

மார்த்தாண்டம் - பெருநற்கிள்ளி
த. மனோ தங்கராஜ், எம்.எல்.ஏ.,
ஆலங்குளம் மரியராஜ்

தூத்துக்குடி - அத்திப்பட்டு சாம்ராஜ்
மாண்புமிகு கீதா ஜீவன்
இரம்ஜான் பேகம்

திருமயம் - ஆடுதுறை உத்திராபதி
மாண்புமிகு எஸ். ரகுபதி
ஈகை தனசேகர்

உளுந்தூர்பேட்டை - சைதை சாதிக்
தா. உதயசூரியன், எம்.எல்.ஏ.,
கம்பம் பாண்டியன்

பட்டுக்கோட்டை - வே. மதிமாறன்
க. அண்ணாதுரை, எம்.எல்.ஏ.,
மதுரை சேவியர்

புதுக்கோட்டை - தஞ்சை கலைமணிபாரதி
கே.கே. செல்லபாண்டியன்
மங்கலம் பிரபாகரன்

தென்காசி - தமிழ் கா. அமுதரசன்
நா. ஜெயபாலன்
பூங்காநகர் கண்ணன்

விருத்தாசலம் - சோம. செந்தமிழ்செல்வன்
மாண்புமிகு சி.வெ. கணேசன்
வேலூர் இரமேஷ்

திருவெறும்பூர் - சென்னை த. அரங்கநாதன்
பரிதி இளம்சுருதி

திருச்செந்தூர் - ஆரூர் மணிவண்ணன்
மாண்புமிகுஅனிதாஆர். ராதாகிருஷ்ணன்
திருப்பூர் கூத்தரசன்

ஒட்டன்சத்திரம் - தூத்துக்குடி சரத்பாலா
மாண்புமிகு அர. சக்கரபாணி
ஆம்பூர் தருமன்

புதுச்சேரி - கந்திலி கரிகாலன்
புதுவை ஆர். சிவா, எம்.எல்.ஏ.,
குடந்தை ராமகிருஷ்ணன்

இராஜபாளையம் - வரகூர் காமராஜ்
மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன்
கவிஞர் சிவமுத்து வளவன்

தஞ்சாவூர் - வழக்கறிஞர் சிவ. ஜெயராஜ்
துரை. சந்திரசேகரன், எம்.எல்.ஏ.,
விசார் க. தமிழரசன்

மயிலாடுதுறை - நாத்திகம் நாகராசன்
நிவேதா எம். முருகன், எம்.எல்.ஏ.,
பொள்ளாச்சி சித்திக்

உதகை - பவானி கண்ணன்
பா.மு. முபாரக்
திருப்பூர் ரஜினி செந்தில்
கோவை வில்லவன்

திருமங்கலம் - சேலம் சுஜாதா
மு. மணிமாறன்
பழனி அப்பாஸ்
கடையநல்லூர் இஸ்மாயில்

கோபிசெட்டி பாளையம் - போடி காமராஜ்
என். நல்லசிவம்
குடியாத்தம் அன்பு
ஜெ. வீரமணி

அண்ணாநகர் - பசும்பொன் இரவிச்சந்திரன்
நே. சிற்றரசு
க. எழிலன்

காரைக்கால் - கோவி. லெனின்
எச். நாஜிம்
ஆலங்குடி செல்வராஜ்

பெரியகுளம் - சிவாஜி கிருஷ்ணமூர்த்தி
தங்க. தமிழ்செல்வன், எம்.பி.,
கு. வாஞ்சிநாதன்

மன்னார்குடி - மதுரை அலெக்சாண்டர்
திருப்பூர் மனோகர்பாபு
மன்னை த. சோழராஜன்

**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை – 18

## கேரள மாநிலம் - கொல்லம் மாவட்டம்

# புனலூரில் ஆதிவாசி கோத்ரவர்க சங்கமம் நிகழ்ச்சி! அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

## கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் அறிக்கை!

திருவனந்தபுரம், ஜன. 24-
கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இந்தியா முழுவதும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாவலனாக முன்னாள் முதல்வர் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசு இருந்து வந்தது. அதுபோலவே இப்போது இந்தியாவிலேயே முன்னணி முதல்வராக அனைத்து மாநிலத்திற்கும் எடுத்துக் காட்டாக திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் தமிழக முதல்வர், தலைவர் தளபதி அவர்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை பாதுகாக்க போராடி



வருகின்றது. அதுபோல கேரள மாநில திமுக அமைப்பும் தலைவர் தளபதி வழியில் கேரள மாநிலத்தில் ஆதிவாசிகள் அதிக அளவில் உள்ள கொல்லம் மாவட்டத்தில் கோத்ரவர்க சங்கமம் என்ற பெயரில் கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் புனலூரில் உள்ள மார்க்கெட் ஜங்ஷனில் 07.02.2025 வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் ஆதிவாசி மக்களுடன் இணைந்து கேரள மாநில திராவிட முன்னேற்றக் கழகம் மாபெரும் ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த ஊர்வலத்தின் நிறைவில் ஆதிவாசி மக்கள் பாரம்பரிய நடனமான முடியாட்டம் நிகழ்ச்சி நடைபெறுகிறது அந்த நிகழ்ச்சியில் தமிழக பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அவர்களுக்கு ஆதிவாசி குல வழக்கப்படி மரியாதை அளிக்கப் படுகிறது.

இந்த மூன்று நிகழ்ச்சிகளும்கேரள மாநில திமுக அமைப்பாளர் கே. ஆர்.முருகேசன் தலைமையில் தென்காசி தெற்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளர் சிவ.பத்மநாதன், மாநில இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் விபின் முருகேசன், கொல்லம் மாவட்டக் கழக செயலாளர் ரெஜிராஜ், சிற்றார் ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்த பொதுக் கூட்டத்தில் ஐநூறுக்கும் மேற்பட்ட ஆதிவாசி மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைகிறார்கள். அவர்களுக்கு தமிழக பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பொன்னாடை அணிவித்து வரவேற்று நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கொல்லம் மாவட்ட திமுக நிர்வாகிகள் சாஜி சுலைமான், மாம்பலத்துறை சலீம், ஸ்டீபன், அஜ்மல், அபிலால், ராஜேஷ், ஷாம் லால், அருள் ஜோதி, பினோய், ஷாலினி, ராணி, லால்ஜி, சதாசிவன் மற்றும் அனைத்து முன்னணி நிர்வாகிகள் செய்து வருகின்றனர் இந்த நிகழ்ச்சியில் கேரள மாநிலம் முழுவதும் உள்ள கழக மாவட்ட கழக செயலாளர்கள் மற்றும் அனைத்து அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம், கட்டேரி காளியம்மன் கோவில் வளாகத்தில் மயிலார் பண்டிகையை முன்னிட்டு நடைபெற்ற காய்கறிகள் தொகுப்பு வழங்கும் விழாவில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு பொதுமக்களுக்கு காய்கறிகள் அடங்கிய தொகுப்புகளை வழங்கி சிறப்பித்தார். மாவட்ட கவுன்சிலர் சிந்துஜா, ஊர் கவுண்டர் ஜெகன் ஆகியோர் நிகழச்சி ஏற்பாடு செய்தார்கள். இந்நிகழ்ச்சியில் ஜோலார்பேட்டை மத்திய ஒன்றிய செயலாளர் கவிதாதண்டபாணி, மாவட்ட பிரதிநிதி மோகன், மாவட்ட அணிகளின் து.அமைப்பாளர்கள் மோகன், நபியுல்லா மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

## தமிழ்நாட்டு ஆளுநரின் எதேச்சதிகார நடவடிக்கைகளுக்கு,

# பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு (UGC) திட்டமிட்டு மேலும் ஒரு வழித்தடம் அமைத்துக் கொடுத்துள்ளது!



**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
உயர்நிலை
செயல் திட்டக்குழு உறுப்பினர்

தமிழ்நாடு முதலமைச்சர் 20.01.2025 ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திரபிரதான் அவர்களுக்கு, பல்கலைக்கழகங்களின் நிதி நல்கைக்குழு(UGC) வெளியிட்டுள்ள பல்கலைக்கழக துணைவேந்தர்கள் நியமனம் குறித்த விதிகளில் உருவாக்கியிருக்கும் திருத்தங்களுக்கான வரைவு அறிக்கையை உடனடியாக திரும்பப் பெற வேண்டுமென கடிதம் எழுதியுள்ளார்கள். மேலும் பாரதிய ஜனதாக் கட்சி அல்லாத மற்றைய அரசியல் கட்சிகள் ஆட்சி அமைத்திருக்கும் டெல்லி, இமாச்சல் பிரதேசம், ஜம்மு காஷ்மீர், ஜார்க்கண்ட், கர்நாடகம், கேரளம், பஞ்சாப், தெலுங்கானா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சருக்கும் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் விதிகள் திருத்தங்களுக்கான வரைவு அறிக்கையை ரத்து செய்ய வேண்டுமென, தமிழ்நாட்டின் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தையொத்த தீர்மானத்தை தாங்களும் தங்களுடைய சட்டமன்றத்தில் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்ப வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளார்கள். மாநில அரசுகளால் நிர்வகிக்கப்படும் பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களைத் தேர்ந்தெடுக்கும் குழு உறுப்பினர்களை மாநில ஆளுநர் நியமிப்பார்கள் என்ற திருத்தமும், கல்வித்துறையில் 10 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றிய பேராசிரியர்கள் துணை வேந்தர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்பதை மாற்றி, தொழில்துறைகளில் பயிற்சி பெற்றவர்களும் துணை வேந்தர்களாக நியமிக்கப்படலாம் என்ற திருத்தமும் கூட்டாட்சி கோட்பாட்டிற்கு முற்றிலும் முரண்பட்ட திட்டமிட்ட செயல்பாடாகும் என்பதோடு, மாநில மக்களின் கல்வி பெறுகின்ற உரிமையையும், முறைகளையும் சீர்குலைக்கின்ற திட்டமிட்ட நடவடிக்கையாகுமென குறிப்பிட்டுள்ளார்கள். மேலும், பல்கலைக்கழகங்களின் நடைமுறைகளில் மாநில அரசுகளின் அதிகாரத்தை பறிக்கின்ற நடவடிக்கையாகவே கருதப்படும். இது குறித்து நாடாளுமன்றத்தின் முன்னாள் பொதுச் செயலாளராக(Secretary General, Lok sabha) பணியாற்றிய ஆச்சாரி அவர்கள் இந்து ஆங்கில நாளேட்டில்(21.01.2025) “பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் விதிதிருத்த வரைவு அறிக்கை கடுமையான அரசியல் சட்டப் பிரச்சினைகளை உள்ளடக்கியது” என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை வார்ப்பித்துள்ளார். (UGC's draft regulation has serious constitutional issues - Hindu date: 21.01.2025) பல்கலைக்கழகங்களின் நிர்வாகம், நிதி, கல்வியின் தரம், பல்துறை ஆய்வுப் பணிகள் ஆகியவற்றை ஒழுங்கு படுத்துவதற்கும், தரத்தை உயர்த்துவதற்கும், நிதி தேவைகளை சரி செய்வதற்கும் 1956 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதுதான் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவாகும். எனவே, இந்தக் குழு இதற்கென உருவாக்கப்பட்ட சட்டத்தின் நோக்கங்களுக்கு முரண்பாடான செயல்களில் ஈடுபடக் கூடாது. அப்படி சட்டத்திற்கு முரண்பட்டோ அல்லது சட்டத்தின் நோக்கத்திற்கு மாறுபட்டோ பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு ஈடுபடுமானால், அத்தகைய செயல் திட்டம், தொடர்புடைய சட்டப்படி செல்லத்தக்கதல்ல. 1956ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பல்கலைக்கழகங்களின் நிதி நல்கைக் குழு சட்டம், நிதி நல்கைக் குழுவின் பணிகளை தெளிவாக வரையறுத்துள்ளது. அந்த வரையறைகளுக்கு உட்பட்டுதான் நிதி நல்கைக் குழு செயல்பட வேண்டும். ஆனால், சமீபத்திய பல்கலைக்கழகநிதிநல்கைக்குழுவின்துணைவேந்தர்கள் நியமனம் குறித்த விதி திருத்தங்களின் வரைவு அறிக்கை பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டது மட்டுமல்ல, சட்டத்தின் நோக்கங்களுக்கும் முற்றிலும் முரண்பட்டதாகும் என்ற இந்தக் கருத்தைதான் நாடாளுமன்றத்திலே நிறைந்த அனுபவம் பெற்ற முன்னாள் லோக்சபாவின் பொதுச் செயலாளர் ஆச்சாரியார் அவர்கள் தன்னுடைய கட்டுரையிலே தெளிவுபடுத்துகிறார்கள்.

ஆச்சாரி அவர்களின் இந்தக் கட்டுரையினைத் தொடர்ந்து, இதே பிரச்சினை குறித்து ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியும், முன்னாள் பல்கலைக்கழகத் (Indian maritime university)துணை வேந்தருமான அசோக்வர்தன் ஷெட்டி அவர்கள் 22.1.2025ம் நாளிட்ட இந்து ஆங்கில இதழில் விரிவான கட்டுரை எழுதியுள்ளார்கள். இவரும், ஆச்சாரி தெளிவுபடுத்திய கருத்துக்களையும், உயர்நீதிமன்ற உச்சநீதிமன்றத் தீர்ப்புகளையும் ஒப்பீடு செய்து விளக்கம் அளிக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் மாநில அரசின் சட்டத்தினைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் நாடாளுமன்றத்தில் 1956ம் ஆண்டு உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் நிதி நல்கைக் குழு சட்டத்தின் அடிப்படையில் புதியதாக துணைவேந்தர் நியமனம் குறித்து மாற்றியமைத்திருக்கும் விதிகளின் திருத்தம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற கருத்தைதான் இவரும் வலியுறுத்தியிருக்கிறார்கள். இது குறித்து கட்டுரைகள் எழுதிய இருவரும், நாடாளுமன்ற நடவடிக்கைகளிலும், நிர்வாகத் துறையிலும் நிறைந்த அனுபவமும், பயிற்சியும் பெற்றவர்கள் என்பதற்கு விளக்கம் தேவையில்லை.

இது குறித்து தமிழ்நாடு முதல்வர் சமீபத்தில் கருத்துத் தெரிவிக்கும் பொழுது, மாநிலங்களின் பல்கலைக் கழகங்களுக்கான செலவினங்களை மாநில அரசுதான் ஏற்றுக்கொள்கிறது. ஆனால், வேந்தர்கள் மட்டும் ஒன்றிய அரசின் பிரதிநிதியான ஆளுநர்களாக இருப்பது ஏற்புடையதல்ல எனத் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு மாநிலத்தின் ஆளுநர்களும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டவர்கள். ஆனால், முதலமைச்சர் அந்த மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். மாநில மக்கள் மீது அக்கறை கொண்டவரும், பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையைப் பெற்றவருமான மாநில முதலமைச்சர்களே தொடர்புடைய மாநிலப் பல்கலைக்கழகங்களுக்கு வேந்தர்களாக பொறுப்பேற்றால் இதுபோன்ற பிரச்சினைகள் இல்லாமல், பல்கலைக்கழகங்கள் சிறப்பாக செயல்படுவதற்கான சூழ்நிலைகள் நிச்சயம் உருவாகும் என்பதில் ஐயமில்லை. உயர் கல்வி அறிவியல் ஆய்வுகள், தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றை மாணவர்களுக்கு வழங்கிடும் பல்கலைக்கழகங்கள் பிரச்சினைகள் எதுவுமின்றி நடைபெறவேண்டுமெனில், இதுபோன்ற உள்நோக்கம் கொண்ட சட்டத் திருத்தங்களோ, விதி மாறுதல்களோ இல்லாமல் பல்கலைக்கழகங்கள் இயங்கிட வேண்டும். மாநிலப் பல்கலைக்கழகங்களில் ஒன்றிய அரசின் பரிந்துரையால் நியமிக்கப்படும் ஆளுநர்கள், எதிர்க்கட்சிகள் ஆட்சி அமைத்திருக்கும் மாநிலங்களில் துணைவேந்தர்கள் நியமனத்தில் சட்டத்திற்கு புறம்பாக தலையிடுவதும், அதை நியாயப்படுத்தும் வகையில் விதிகளைத் திருத்தம் செய்வதும், மாநிலங்களால் உருவாக்கப்பட்டிருக்கும் பல்கலைக்கழகங்களை, ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் முயற்சியாகவே கருதமுடிகிறது. இதுமட்டுமல்ல பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு தற்போது செய்திருக்கும் விதி திருத்தங்களை ஆழ்ந்து ஆய்வு செய்தால், ஒன்றிய அரசு பல்கலைக்கழகங்களை ஒரு கால கட்டத்தில் பெருவணிகநிறுவனங்கள் (Corporate) வசம் ஒப்படைத்து விடுமோ என்ற அச்சமும் இன்று மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது.

ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு சித்தாந்த வழிகாட்டும் அமைப்பாக செயல்பட்டு வருவதுதான் இராஷ்ட்ரிய சுயம் சேவக் சங் (RSS) என்ற மதவாத அமைப்பாகும். தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் சித்தாந்தமாகிய “ஒரே நாடு, ஒரே தேர்தல்” என்ற கொள்கைகளையும், இந்துத்துவாக் கோட்பாடு, இந்து ராஷ்ட்ரம் என்ற முழக்கங்களும் அமல்படுத்தப்பட வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்ட ஒன்றிய அரசு, நிர்வாக அமைப்புகளில் தங்களின் கோட்பாடுகளை அமல்படுத்த ஏதுவாக மாற்றங்களை தொடர்ந்து உருவாக்கிக் கொண்டு வருகிறது. இதன் முக்கியமான நோக்கமாக மாநில அரசுப் பல்கலைக் கழகங்களை திரைமறைவில் ஒன்றிய அரசு மாநில ஆளுநர்கள் மூலம் அனைத்து அதிகாரங்களையும் கைப்பற்றி, தங்களின் கொள்கைப் பிரச்சார மையங்களாக்கும் முயற்சியின் வெளிபாடுதான் பல்கலைக் கழக நிதி நல்கைக் குழுவின் நடைமுறை விதிகள் மாற்றங்களாகும். இப்படி படிப்படியாக விதி மாற்றங்களை செய்து, பெரும் வணிக நிறுவனங்களிடம் (Corporate) பல்கலைக்கழகங்களை அவர்களிடம் ஒப்படைப்பதன் மூலம் அவர்களும் பெரும் பொருள் ஈட்டுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அத்தோடு, ஒன்றிய அரசின் மதவழிக் கல்வியை மாணவர்களிடம் பரப்புவதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்ற தொலை நோக்கு திட்டத்தில் இத்தகைய முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். ஆனால், அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி கவலைப் பட்டதாகவும் தெரியவில்லை.

இந்த இக்கட்டான சூழ்நிலையில்தான் தமிழ்நாடு முதல்வர் திராவிட மாடல் ஆட்சியின் தலைவர் மிகத் தெளிவாக இந்த பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரவும், இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படை கோட்பாடுகளான கூட்டாட்சி கோட்பாட்டை நிலை நிறுத்தவும், இதன் மூலம் இந்திய ஒன்றியத்தின் ஒற்றுமையை காப்பாற்றவும், சட்ட போராட்டத்தை தொடருவேன், அவசியம் ஏற்பட்டால் மக்களையும் சந்திப்பேன் என்று அறைக்கூவல் விட்டதோடு, எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநில முதல்வர்களுக்கும் இது தொடர்பாக கடிதம் எழுதியுள்ளார்கள். தமிழ்நாடு முதல்வரின் இந்த எதிர்ப்புக் குரல் அனைத்து மாநில மக்களிடமும் நிச்சயம் பரவும். அதுமட்டுமல்ல, ஒன்றிய அரசு எதிர்கொள்ள இயலாத எழுச்சியும், கிளர்ச்சியும் உருவாகும் என்பதுமட்டும் உறுதி!